நகராட்சி அலுவலகம்,
சத்தியமங்கலம்.

நாள் : 27.08.2021

2021-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 27.08.2021-ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் அவசரக் கூட்டம் நடைபெறும். அதற்கான பொருட்களின் விபரப்பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

## பொருட்களின் விபரப்பட்டியல்

**பொருள் : 1**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட அத்தாணி ரோட்டில் அமைந்துள்ள வாரசந்தை வணிக வளாக கட்டிடம் கட்டப்பட்டு பல வருடங்கள் மேலாகி விட்டது.இந்த வணிக வளாகக்கட்டிடங்கள் மூலம் நகராட்சி கடைகள் மூலம் வருவாய் ஈடு செய்து வருகிறது.தற்பொழுது இந்த கட்டிடங்களின் கட்டுமானங்கள் பழுதுகள் ஏற்பட்டு கட்டிடத்தின் மேல்தளம் முற்றிலும் சேதம் அடைந்துள்ளது.இதனால் அங்குள்ள வியாபாரிகள் மிகவும் அவதிப்படுகிறார்கள்.மேலும், வருவாய் ஆய்வாளர் அவர்களின் அறிக்கையில் வாரச்சந்தை கடை எண்.5 முதல் 22 வரை உள்ள கடைகளின் மேற்கூரை மிகவும் பழுது ஏற்பட்டு இடியும் நிலையில் உள்ளதாக தெரிவித்துள்ளார்கள்.மேற்கண்ட கட்டிடம் கட்டி பல வருடங்களுக்கு மேலாகி விட்டதால் சுருக்கி,மேல்தள ஓடுகள், வண்ண பூச்சு மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் ஆகும். இப்பணி மேற்கொள்ள உத்தேசமாக ரூ.7.00 இலட்சம் தேவைப்படுகிறது.இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்,
2021-2022-ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் சேர்த்துக் கொள்ளலாம்.

(கட்டு எண்.100/2016/இ1)

தீர்மானம் எண் : 665 அனுமதிக்கப்பட்டது. நாள் 27.08.2021

**பொருள் : 2**

சத்தியமங்கலம் நகராட்சியில் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.20452/2020/எல்.எ3 நாள்.10.11.2020 இன்படி 15 வது மத்திய நிதி குழு ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் 2020-21 ஆம் ஆண்டு மில்லியன்கள் அல்லாத நகரங்களுக்கு மானயம் வழங்கப்பட்டது.Tied Grant to Non -Million Plus cities முதல் தவணையாக திட்ட நிதி ரூ.66,64,752.00

ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டம் செயல்படுத்தும் பொருட்டு திடக்கழிவு மேலாண்மை அலகில் சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட கோவிந்தராஜ் மனைப்பிரிவு ஜீவா செட் அருகில் வளம் மீட்பு மையம் அமைக்கும் பணிக்கு ரூ.20.00 இலட்சத்தில் மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.486/30.11.2020 இன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 19.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் M/s.Vino Constructions Contractor Bhavani Sagar மதிப்பீடு விலையை விட 4.98 சதவீத கூடுதலாக கொடுத்துள்ளார்கள். மேற்கண்ட ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு மன்ற தீர்மான எண்.553 நாள்.26.2.2021 அதன்படி 26.6.2021 அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டது. மேற்கண்ட பணி ஆரம்பிக்கும் பொழுது அங்குள்ள குடியிருப்பு வாசிகள் பூங்காவிற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் நகராட்சி குப்பைகள் கொட்டி பிரிக்கும் பணி செயல்படுத்தப்பட்டால் நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாகவும், பூங்காவிற்கான இடத்தில் பூங்கா அமைத்து கொடுத்தல் அங்குள்ள பொதுமக்கள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதாகவும், மேற்கண்ட இடத்தில் வளம் மீட்பு மையம் அமைக்க கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள் என்று துப்புரவு ஆய்வாளர் அவர்களின் அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள். மேற்கண்ட பணியினை கைவிடலாம் என்றும் தெரிவித்துள்ளார்கள். இதன் தொடர்பான செய்தியினை தினமலர் தினசரி பத்தரிக்கையில் எதிர்ப்பு தொடர்பான செய்தி வந்துள்ளது.

எனவே, இப்பணியியை இரத்து செய்திடவும், மாற்றாக நகராட்சி நிர்வாக மண்டல செயற் பொறியாளர் வழங்கிய தொழில்நுட்ப அனுமதி இரத்து செய்யவும்,மேற்படி பணிக்கு 15 வது மத்திய நிதி குழு மானியத்தின் கீழ் மேற்படி மதிப்பீடு தொகைக்கு கீழ்கண்ட குடிநீர் விநியோக மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1) சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட ரங்கசமுத்திரம் மேல்நிலைத்தொட்டி முதல் மைசூர் டிரங்க் ரோடு வரை (பி.ஆர்.சி. கடை வரை) பிரதான குடிநீர் குழாய் அமைத்தல். (மதிப்பீடு தொகை ரூ.9.90 இலட்சம்.)
2) சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட டீச்சர்ஸ் காலனி மற்றும் பாக்கியலட்சுமி நகர் ஆகிய இரண்டு பகுதியில் குடிநீர் விஸ்தரிப்பு பணிகள் மேற்கொளுதல். (மதிப்பீடு ரூ.2.10 இலட்சம்) மற்றும்
3) சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட நகராட்சி உரப்பூங்காவில் விண்டேராஸ் பிளாட்பாரத்திற்கு தடுப்பு சுவர் கட்டுதல் (மதிப்பீடு ரூ.8.00 இலட்சம்)

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.1356/2020/இ1)

தீர்மானம் எண் : 667 அனுமதிக்கப்பட்டது. நாள் 27.08.2021

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

நகராட்சி அலுவலகம்,
சத்தியமங்கலம்.

நாள் : 27.08.2021

2021-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31.08.2021-ஆம் தேதி செவ்வாய்கிழமை மாலை 04.30 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் சாதாரணக் கூட்டம் நடைபெறும். அதற்கான பொருட்களின் விபரப்பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

## பொருட்களின் விபரப்பட்டியல்

**பொருள் : 1**

இந்நகராட்சியின் ஆணையாளர் அவர்களின் ஆகஸ்டு 2021-ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(கட்டு எண்.1813/2017/சி1)

தீர்மானம் எண் : 668 பதிவு செய்யப்பட்டது. நாள் 31.08.2021

**பொருள் : 2**

இந்நகராட்சியின் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்டு 2021-ம் மாத மாதங்களின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(கட்டு எண்.1813/2017/சி1)

தீர்மானம் எண் : 669 பதிவு செய்யப்பட்டது. நாள் 31.08.2021

**பொருள் : 3**

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் திருவள்ளுவர் திடல் மற்றும் அத்தாணி ரோடு உரக்கிடங்கு இரண்டு நுண் உரமாக்கல் மையங்களில் தினசரி சேகரமாகும் மக்கும் குப்பைகள் அரைக்கப்பட்டு உரமாக்கப்பட்டு விவசாயிகளுக்கு கிலோ ரூ.30/- பைசா வீதம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. உரம் தயாரிக்கும் பொழுது பயன்படுத்தப்படும் EM Solution தயாரிக்க தேவைப்படும் தயிர் மற்றும் சர்க்கரை வாங்கிக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.30,000/- க்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. பொது சுகாதார நலன் கருதி நகர்மன்றம் அனுமதிக்கலாம்.
2. உரம் விற்ற வருவாய் நிதியில் தொகை வழங்க நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் : 670 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.08.2021

பொருள் : 4

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகரில் உருவாகும் பிளாஸ்டிக் கழிவுகள் தனியே பிரித்தெடுக்கப்பட்டு திருவள்ளுவர் திடல் மற்றும் அத்தாணி ரோடு உரக்கிடங்கு ஆகிய இரண்டு RRC-ல் பேலிங் செய்து அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைக்கு எரிபொருளாக அனுப்பப்பட்டு வருகிறது. பேலிங் செய்ய தேவையான கிளிப் மற்றும் பிளாஸ்டிக் டொய்ன் வாங்கிக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.30,000/- க்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. பொது சுகாதார நலன் கருதி நகர்மன்றம அனுமதிக்கலாம்.
2. உரம் விற்ற வருவாய் நிதியில் தொகை வழங்க நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் : 671 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.08.2021

பொருள் : 5

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை -28 அவர்களின் கடிதம் எண். 28369/ஜே 3 நாள்.04.12.2018 சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண். 1,2,17 முதல் வார்டுகள் 22 வரை பகுதிகளில் 01.04.2020 முதல் 31.03.2021 வரை (Outsourcing) தனியார் வசம் பணி நீட்டிப்பு செய்து 50 துாய்மை பணியாளாகள் மூலம் துாய்மைப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வந்தனர். மேலும் வி.பி.என்.பில்டர்ஸ் தனியார் நிறுவனத்திற்கு தொடர்ந்து ஒரு மாத காலம் என்ற முறையில் 01.04.2021 முதல் 31.08.2021 வரை பணி நீட்டிப்பு செய்யப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் வரை ஒரு மாதம் காலம் 01.09.2021 முதல் 30.09.2021 தற்காலிக முறையில் பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனியார் நிறுவனமான வி.பி.என். பில்டர்ஸ், திருப்பூர் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் சம்பள விகிதத்தில் ஒரு மாத கால மட்டும் (01.09.2021 முதல் 30.09.2021 வரை) பணி நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 7,86,000/- க்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : -

1. நகர் மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார நலன் கருதி நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.137/2020/எச்.1)

தீர்மானம் எண் : 672 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.08.2021

பொருள் : 6

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை -28 அவர்களின் கடிதம் எண். 28369/ஜே 3 நாள்.04.12.2018 சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண். 11,12,23 முதல் வார்டுகள் 27 வரை பகுதிகளில் 01.04.2020 முதல் 31.03.2021 வரை (Outsourcing) தனியார் வசம் பணி நீட்டிப்பு செய்து 55 துாய்மை பணியாளாகள் மூலம் துாய்மைப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வந்தனர். மேலும் வி.பி.என்.பில்டர்ஸ் தனியார் நிறுவனத்திற்கு தொடர்ந்து ஒரு மாத காலம் என்ற முறையில் 01.04.2021 முதல் 31.08.2021 வரை

பணி நீட்டிப்பு செய்யப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் வரை ஒரு மாதம் காலம் 01.09.2021 முதல் 30.09.2021 தற்காலிக முறையில் பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனியார் நிறுவனமான வி.பி.என். பில்டர்ஸ், திருப்பூர் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் சம்பள விகிதத்தில் ஒரு மாத கால மட்டும் (01.09.2021 முதல் 30.09.2021 வரை) பணி நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.8,65,000/- க்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : -

1. நகர் மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார நலன் கருதி நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1304/2020/எச்.1)

தீர்மானம் எண் : 673 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.08.2021

பொருள் : 7

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் ஒளி & ஒலி விளம்பரம் செய்யும் உரிமம் 31.03.2021 உடன் முடிவடைவதால் அரசு ஆணை எண் 181-ன் நகர்மன்ற அனுமதியின்படி ஒப்படைக்கும் தேதி முதல் 3ஆண்டு காலத்திற்க்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நாள்.11.08.2021 அன்று 11-வது முறையாக அறிக்கை கோரப்பட்டது. இதில் ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்ட இனத்திற்க்கு கோரப்பட்ட உயர்ந்த பட்ச ஆண்டு குத்தகையை உறுதி செய்வது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | இனம் | ஏலதாரரின் பெயர் | சாராசரி ஆண்டு வாடகைரூ. | சென்றாண்டு 2019-2020-ம் ஆண்டு வாடகை ரூ. | ஒப்பந்துப் புள்ளியில் தற்போது வரப்பெற்றஉயர்ந்த பட்ச ஆண்டு வாடகை ரூ. | உரிமக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலையத்தில் ஒளி மற்றும் ஒலி விளம்பரம் செய்யும் உரிமம் | ஆர்.கார்த்திகேயன் | 21,017/- | 22,050/- | 25,500/- | 01.09.2021 முதல் 31.08.2024 வரை |

அலுவலகக்குறிப்பு :-

I.மேற்கண்ட புதிய பேருந்து நிலையத்தில் ஒளி & ஒலி விளம்பரம் செய்யும் உரிமம் பொது ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு 11.08.2021-ஆம் தேதி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் திரு.ஆர்.கார்த்திகேயன் என்பவர் உயர்ந்த பட்ச ஆண்டு குத்தகை உரிமமாக ரூ.25,500/-க்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியுள்ளார். இது சராசரி மதிப்பு மற்றும் சென்றாண்டை (2019-2020) காட்டிலும் கூடுதலாக வரப்பெற்றுள்ளது. இதனை மன்றம் அனுமதிக்கலாம்.

II.01.09.2021-ஆம் தேதி முதல் உரிமம் உத்திரவிடப்பட வேண்டியுள்ளதால் நகர்மன்ற முன்அனுமதி பெறப்பட்டு ஒளி & ஒலி விளம்பரம் செய்யும் உரிமம் மன்றம் முன் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.1200/2020/அ3 )

தீர்மானம் எண் : 674 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.08.2021

பொருள் : 8

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான கச்சேரி வீதி சத்திரக் கடை எண்.33-ஐ திருமதி.மு.ஜெயகணபதி என்பவருக்கு 01.07.2019 முதல் 30.06.2022 வரை உண்டான காலத்திற்க்கு மாத வாடகை ரூ.5,050/-க்கு உரிம ஆணை வழங்கப்பட்டது. தற்போது கடை உரிமதாரர் தனது உடல் நிலை சரியில்லாத காரணத்தாலும், கொரனா நோய் தடுப்பு காரணத்தால் கடை பூட்டிய நிலையில் உள்ளதாலும் கடையை தொடர்ந்து நடத்த முடிய வில்லை என 09.08.2021-ஆம் தேதியில் விண்ணப்பம் செய்துள்ளார். எனவே இவரின் மேற்கண்ட உரிம இனத்தை ரத்து செய்து புதிய இனமாக அரசானை எண்.92 மற்றும் ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

மேற்க்கண்ட கச்சேரி வீதி சத்திரக் கடை எண்.33-ன் உரிமதாரர் தற்போது உடல் நிலை சரியில்லாத காரணத்தால் கடையை தொடர்ந்து கடையை நடத்த முடிய வில்லை என மனு வழங்கியுள்ளார். இதன் மீது வருவாய் ஆய்வாளர் அவர்களின் 17.08.2021-ஆம் தேதி குறிப்பு வழங்கபட்டதின் பேரில் கச்சேரி வீதி சத்திரக் கடை எண்.33-ன் உரிமம் காலம் முடிவடையாத நிலையில், மேற்கண்ட கடையினை ஒப்படைப்பு செய்வதால் உரிம இனத்தை ரத்து செய்து, மேலும் டெபாசிட் தொகை பறிமுதல் செய்தும் புதிய இனமாக 17.08.2021 முதல் வழங்க பரிந்துரை செய்துள்ளார். எனவே மேற்கண்ட கடையின் உரிமம் இரத்து செய்து ஒப்படைக்கும் தேதி முதல் மூன்றாண்டு காலத்திற்க்கு அரசாணை எண்-92 மற்றும் பொது ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

அவசர அவசியம் கருதி ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

( ந.க.எண்.688/2021/அ3 )

தீர்மானம் எண் : 675 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.08.2021

பொருள் : 9

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான கச்சேரி வீதி சத்திரக் கடை எண்.32-ஐ திரு.Dr.எஸ்.தினேஷ் பாபு என்பவருக்கு 01.07.2019 முதல் 30.06.2022 வரை உண்டான காலத்திற்க்கு மாத வாடகை ரூ.5,050/-க்கு உரிம ஆணை வழங்கப்பட்டது. தற்போது கடை உரிமதாரர் தனது உடல் நிலை சரியில்லாத காரணத்தாலும், கொரனா நோய் தடுப்பு காரணத்தால் கடை பூட்டிய நிலையில் உள்ளதாலும் கடையை தொடர்ந்து நடத்த முடிய வில்லை என 09.08.2021-ஆம் தேதியில் விண்ணப்பம் செய்துள்ளார். எனவே இவரின் மேற்கண்ட உரிம இனத்தை ரத்து செய்து புதிய இனமாக அரசானை எண்.92 மற்றும் ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

மேற்க்கண்ட கச்சேரி வீதி சத்திரக் கடை எண்.32-ன் உரிமதாரர் தற்போது உடல் நிலை சரியில்லாத காரணத்தால் கடையை தொடர்ந்து கடையை நடத்த முடிய வில்லை என மனு வழங்கியுள்ளார். இதன் மீது வருவாய் ஆய்வாளர் அவர்களின் 17.08.2021-ஆம் தேதி குறிப்பு வழங்கபட்டதின் பேரில் கச்சேரி வீதி சத்திரக் கடை எண்.32-ன் உரிமம் காலம் முடிவடையாத நிலையில் மேற்கண்ட கடையினை ஒப்படைப்பு செய்வதால் உரிம இனத்தை ரத்து செய்து, மேலும் டெபாசிட் தொகை பறிமுதல் செய்தும் புதிய இனமாக 17.08.2021 முதல் வழங்க பரிந்துரை

செய்துள்ளார். எனவே மேற்கண்ட கடையின் உரிமம் இரத்து செய்து ஒப்படைக்கும் தேதி முதல் மூன்றாண்டு காலத்திற்க்கு அரசாணை எண்-92 மற்றும் பொது ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
( ந.க.எண்.689/2021/அ3 )

தீர்மானம் எண் : 676 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.08.2021

**பொருள் : 10**

சத்தியமங்கலம் ரங்கசமுத்திரம் வார்டு எண். 23 SF எண். 89/2, 89/4 கரட்டூர் ரோட்டில், செயலாளர், சத்தியமங்கலம் மலர்கள் விவசாயிகள் சங்கம் அவர்களில் தனியார் மார்க்கெட் நடத்த 8 ஆண்டுகளுக்கு உரிமம் கோரி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்.மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு :

மேற்படி நிறுவனத்தின் ஆண்டு வருமானம் ரூ.4,64,400/- நேரிடை ஆய்வின்படி தெரியவருகிறது. இதன்படி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 262 -ன்படி ஆண்டு வருமானத்தில் 15% உரிமம் தொகையாக நிர்ணயம் செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் சட்ட விதிகளுக்குட்பட்டு கீழக்கண்ட நிபந்தனைகளின்படி ஓராண்டிற்கு ரூ.69,660/- வீதம் உரிமத்தொகை நிர்ணயம் செய்யலாம்.

**நிபந்தனைகள் : -**

1. மாாக்கெட் நடத்தவுள்ள பகுதிக்கு போதுமான நடைபாதைக்கும், நுழைவாயில் கதவும் அமைக்கப்பட வேண்டும்.

2. மாாக்கெட் கட்டிடங்கள் உறுதியானதாகவும், தீப்பிடிக்காததாகவும் இருக்க வேண்டும். தீ தடுப்பு சாதனங்கள் கட்டாயம் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

3 மாாக்கெட்டிற்கு வருபவர்கள் மற்றும் கடை பணியாளர்களுக்கு போதுமான அளவு தனித்தனியே (ஆண்/பெண்) கழிப்பிட வசதிகள் அமைக்கப்பட வேண்டும்.

4 மாாக்கெட் கடைக்கு போதுமான சாக்கடை வசதி செய்யப்பட வேண்டும்.

5 மாாக்கெட்டில் போதுமான அளவு குடிநீர் வசதி செய்யப்பட வேண்டும்.

6 மாாக்கெட்டில் அவ்வப்போது சேகரமாகும் குப்பைகளை சுத்தம் செய்து மார்க்கெட் பகுதியை துாய்மையாக பராமரிக்கப்பட வேண்டும்.

7 குப்பைகளை சேகரித்து போதுமான அளவு குப்பை தொட்டியில் மூடியுடன் தனித்தனியே வைக்கப்பட வேண்டும் மற்றும் தங்கள் சொந்த பொறுப்பில் உரமாக்கிக் கொள்ள வேண்டும்.

8 மாாக்கெட் வளாகத்திற்குள் எந்த சமயத்திலும் யாரும் குடியிருக்க அனுமதிக்கக் கூடாது.

9 தொடர்ந்து நோயுள்ளவர்கள் மாாக்கெட் வளாகத்தில் அனுமதிக்கக் கூடாது.

10 ஆணையாளர், பொது சுகாதாரப்பிரிவு அலுவலர்கள், இரவு பகல் எந்த நேரத்திலும் மாாக்கெட் பகுதிகளை முன் அறிவிப்பு இல்லாமல் பார்வையிட அதிகாரமுண்டு.

11 தொற்று நோய்கள் ஏற்படும் போது பொது சுகாதார விதிகளின்படி மாாக்கெட் வளாகத்தில் நடவடிக்கை எடுக்கவும் அதிகாரமுண்டு.

12 மேற்கண்ட உரிமத்தை எப்போது வேண்டுமானாலும் ரத்து செய்ய நகர் மன்றத்திற்கு உரிமையுண்டு. அதன்மீது நஷ்ட ஈடு கோரவோ, நீதி மன்றத்திற்கு செல்லவோ கூடாது.

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தனியார் பூ மாாக்கெட் நடத்த உரிமம் வழங்கமன்றம்அனுமதிக்கலாம். (ந. க.எண். 1080/2017/அ3)

தீர்மானம் எண் : 677 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.08.2021

**பொருள் : 11**

இந்நகராட்சியில் புதிய பேருந்து நிலைய வளாகத்தில் வடபுறம் உள்ள சைவ உணவகத்தை திரு. எ.ஆர். எஸ். சண்முக சுந்தரம் அவர்கள் குத்தகைக்கு நடத்தி வருகிறார். இவர் நகராட்சிக்கு வாடகை தொகையை செலுத்த இவ்வலுவலக நோட்டீஸ் ந.க.எண்.1200/2020/அ3 நாள்.22.04.2021-ன்படி நோட்டீஸ் அனுப்பப்பட்டது. இதனை எதிர்த்து இவர் சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கிற்க்கு நகராட்சி சார்பாக அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.எம்.ஏழுமலை அவர்கள் W.P.N.11217/2021-ன்படி ஆஜராகி நகராட்சிக்கு சாதகமாக 05.05.2021 ஆம் தேதியில் உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் ஆஜரான அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு. எம். ஏழுமலை அவர்கள் ரூ.15,000/- வழங்க கேட்டுள்ளார். இத்தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிது.

அலுவலகக்குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர் மன்ற முன் அனுமதி பெற்று வழக்கு கட்டணம் ரூ.15,000/- செலுத்தியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1200/2020/அ3)

தீர்மானம் எண் : 678 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.08.2021

**பொருள் : 12**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு அலுவலக ஈப்பு எண்.TN 36AX 0783 வாகனத்தின் நான்கு டயர்கள் மாற்றப்பட வேண்டும், அனைத்து ஆயில் சர்வீஸ், மின்கலன் புதிததாக மாற்றப்பட வேண்டும் கிளட்ச் அசெம்பிள் செக்கிங், குளிர் சாதன வசதியில் பராமரிப்பு பணி, Interior leaning, A/c Blower Grill Change பொதுவான பழுதுகளை சரி செய்து தருமாறு வாகனத்தின் ஓட்டுநரின் விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான M/s.CAI Industries Coimbatore இல் பழுதுகளை சரி செய்யும் பொருட்டு உத்தேச செலவினம் ரூ.1.10 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், நகர் மன்றத்தின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும்,2021-2022 ஆம் ஆண்டு திருத்திய வரவு-செலவு பட்டியல் சேர்த்து கொள்ளலாம்.
3) மேற்கண்ட பணிக்கு அங்கீகாரத்தை விட அதிகமாக செலவினம் உள்ளதால் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் பின்னேறப்பு பெற்று கொள்ளலாம்.
4) ஈப்பு வாகனத்தை அவசியத்தை முன்னிட்டு தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் : 678 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.08.2021

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.